விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 121 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 05 வியாழக்கிழமை (18.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது வரலாற்றுத் தவறு

## தமிழக தேர்தல் பிரசாரத்தில் பாரதப் பிரதமர் மோடி தெரிவிப்பு



(சென்னை)

கச்சதீவை இலங்கைக்கு வழங்கியமை மன்னிக்க முடியாத வரலாற்றுத் தவறு என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய மக்களவைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், தமிழகம் நெல்லையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### பரமேஸ்வரா சந்தியில் விபத்து
### இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் ஒன்று காருடன் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 15


### சுன்னாகத்தில் கசிப்புடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் சூட்சுமமான முறையில் கசிப்பினை பொதி செய்து கொண்டிருந்த பெண்ணொருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம்தெற்கு, சுன்னாகம் பூதராயர் 15

## தற்போது எனக்கும் சுமந்திரனுக்கும் இடைவெளி இருப்பது உண்மைதான்
### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போது தனக்கும் சுமந்திரனுக்கும் இடையில் இடைவெளி இருப்பது உண்மைதான் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட 15

### நெல்லியடி கரவெட்டியில்
## மருதமடு மாதாவின் திருச்சொரூப பவனி



15

### யாழில் கூரிய ஆயுதத்தால் மனைவியைத் தாக்கிய கணவன்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பகுதியில் கணவன் ஒருவர் மனைவியை, கூரிய ஆயுதத்தால் வெட்டி தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், படுகாயமடைந்த மனைவி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த தாக்குதலை மேற்கொண்ட கணவன் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக் 15

## நான் மோசடி செய்யவில்லை முடிந்தால் வெளிப்படுத்துங்கள்
### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தாம் பதவியேற்றது முதல் எந்தவித மோசடியும் செய்யவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தான் மோசடி செய்திருந்தால் அதை யாராக 15

## வடக்கில் வெப்பம் மேலும் உயர்வடையும்
### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வெப்பநிலை இன்று மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, மேல், சப்ரகமுவ, 15

### யுக்திய நடவடிக்கை
### 703 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது 9 பெண்கள் உட்பட 703 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

### 4.5 பில்லியன் டொலர்
## முதலீட்டை நாட்டுக்கு கொண்டுவரத் திட்டம்

(கண்டி)

இந்த ஆண்டு 4 முதல் 4.5 பில்லியன் டொலர்கள் வரையிலான முதலீட்டை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான அனைத்துத் திட்டங்களும் தயார் செய்யப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டின் பொக்கிஷமாய் விளங்கிய பண்டிதர் கடம்பேசுவரன்

## முன்னாள் துணைவேந்தர் சண்முகலிங்கன் அஞ்சலி



பண்பாட்டின் பொக்கிஷமாய் விளங்கிய பேராசான் பண்டிதர் ந.கடம்பேசுவரன் என முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

ஈழத்து மரபுவழி பண்டித கல்வியின் பேராசானை தமிழுலகம் இழந்து நிற்கின்றது கடந்த அரைநூற்றாண்டு காலமாக மரபுவழித் தமிழ் கல்வி நிறுவனமான ஆரிய திராவிட பாஷாவிருத்தி சங்கத்தினை பல்வேறு இன்னல்களின் மத்தியில் காத்துநின்ற செயல் வீரனின் மறைவு ஈடுசெய்ய முடியாதது இந்தப் பயணத்தில் அவரோடு இசைந்த கணங்கள் அர்த்தம் நிறைந்தவை மறக்க முடியாதவை.

அண்மையில் எங்கள் பல்கலைக்கழக திறந்த தொலைக்கல்வி நிலையத்துடன் இணைந்து மரபுவழி பண்டித கல்வியை வழங்கும் அவரின் நெடுநாள் கனவு மெய்ப்படும் வேளையில் இந்த இழப்பு நேர்ந்திருக்கிறது மரபு வழி தமிழ்க் கல்வியில் ஆர்வம் கொண்ட அனைவரும் ஒன்றிணைந்து அவர் தொடங்கிய பணியினை காத்தும் வளர்த்தும் நிற்பதே அவருக்கான அஞ்சலியாகும் என பேராசிரியர் சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார். (ம-7)

# கோட்டாவின் சொகுசு வாகனம் மொடல் அழகி பியூமி பயன்படுத்திய விவகாரம் சர்ச்சை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திய அதிசொகுசு வாகனமான ரேஞ்ச் ரோவரை மொடல் அழகியான பியூமி ஹன்சமாலி பயன்படுத்திய விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்து உடனடியாக விசாரணையை முன்னெடுக்குமாறு சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவில் நேற்று முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

Mage Rata அமைப்பின் தலைவரான சஞ்சய மஹவத்தவினாலேயே குறித்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாட்டில் தேர்தல் நெருங்கிவிட்டது என்பது தெளிவாகிறது,

அரசியல்வாதிகள் தாம் சேமித்த கறுப்புப் பணத்தை வரவிருக்கும் தேர்தல் பிரசாரங்களில் பயன்படுத்த முனைகின்றார்கள்.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திய அதிசொகுசு வாகனமான ரேஞ்ச் ரோவரை பியூமி ஹன்சமாலி எவ்வாறு பெற முடிந்தது என்பதில் எங்களுக்கு சில சந்தேகங்கள் உள்ளன.

குறிப்பாக ரேஞ்ச் ரோவர் வாகனம் முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டதா அல்லது கோட்டாபயவால் பியூமிக்கு வழங்கப்பட்டதா என்ற கேள்வி எழுகின்றது.

அரசியல்வாதிகளின் பண மோசடி நடவடிக்கைகளுக்கு பியூமி ஹன்சமாலி பயன்படுத்தப்படுகின்றாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது என சஞ்சய மஹவத்த குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# கட்டுநாயக்க - டுபாய் விமான சேவைகள் ரத்து

ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது நிலவும் மோசமான காலநிலை காரணமாக சில விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று மாலை 6 25 மணிக்கு டுபாய்க்கு புறப்படவிருந்த மற்றும் அங்கிருந்து இலங்கைக்கு பயணிக்கவிருந்த விமான சேவைகளை இரத்துச் செய்துள்ளதாக ஶ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அறிவித்துள்ளது.(ம-7)

# கச்சதீவு, மீனவர் விவகாரம் இந்திய தேர்தல் பிரசார பேசுபொருளாக மாற்றம்

(சென்னை)

கச்சதீவு, மீனவர் விவகாரங்கள் இந்திய மக்களவை தேர்தல் பிரசாரங்களின் பேசு பொருளாக மாறியுள்ளது.

இந்தியாவின் 18 ஆவது மக்களவை தேர்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

7 கட்டங்களாக நடைபெறும் தேர்தல் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், ஜூன் 4 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாகவுள்ளன.

கச்சதீவு விவகாரம் மற்றும் தமிழக மீனவர்கள் குறித்து இம்முறை பிரசாரங்களில் அதிகமாக பேசப்பட்டது.

இந்நிலையில், தமிழக மீனவர்கள் நலனுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் செயற்படுத்தியுள்ள திட்டங்களை பட்டியலிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதில் மீனவர்களுக்கான வாக்குறுதியை பிரதமர் நரேந்திர மோடி நிறைவேற்றவில்லை என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாம் பிரதமரானால் தமிழக மீனவர்களை பாதுகாப்பதாக 2014 ஆம் ஆண்டில் ராமநாதபுரத்தில் மோடி உறுதிபூண்ட போதிலும், 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும் திமுகவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மோடியின் ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் முன்பை விட அதிகமாக மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழக மீனவர்களின் உடைமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மீனவர்கள் மீதான தாக்குதல் அதிகரித்த போதிலும் இலங்கையைக் கண்டித்து பிரதமர் நரேந்திர மோடி ஒரு வார்த்தையேனும் பேசவில்லை எனவும், தமிழக மீனவர்களுக்காக சிறு துரும்பையும் பிரதமர் மோடி அசைக்கவில்லை எனவும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த காங்கிரஸ் ஆட்சியுடன் ஒப்பிடுகையில், தமது ஆட்சியின் கீழ் இந்திய மீனவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதில்லை என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தமது அரசாங்கம் இலங்கையுடன் சிறந்த இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொண்டமையின் காரணமாகவே இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தடுக்க முடிந்துள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

கச்சதீவு பிரச்சினையை காங்கிரஸ் அரசாங்கமே உருவாக்கியதாகவும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.(ம-7)


## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
25 - 07 - 1940



ஆண்டவன் அடியில்
17 - 04 - 2024

**சரவணமுத்து கந்தசாமி** (கந்தவனம்)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சரவணமுத்து கந்தசாமி (கந்தவனம்) நேற்றுப் புதன்கிழமை (17.04.2024) தனது 84 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் கந்தசாமி சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தெய்வயானை ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராசா மற்றும் கிருபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடேஸ்வரன், அருந்ததி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷ்ணசீலன், சிந்துகா, கௌரிசங்கர், நிறோஜா, அனிந்திகா, பிரவீன், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (18.04.2024) நண்பகல் 12.00 மணியளவில் ஏழாலை கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக குப்பிழான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆத்மஜோதி வீதி,**
**ஏழாலை கிழக்கு,** 021 224 5296, 077 501 8662, 074 177 8254
**ஏழாலை.**

தகவல்: குடும்பத்தினர்

## பெயர் மாற்ற அறிவித்தல்

ஆரோக்கியபுரம், முல்லைத்தீவைச் சேர்ந்த விவேகானந்தன் இதியகாந்தி ஆகிய நான் 17.04.2024 முதல் எனது பெயரை நித்தியகாந்தி எனப் பெயர் மாற்றம் செய்வதுடன் இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
விவேகானந்தன் நித்தியகாந்தி

(485)

## வேலையாட்கள் தேவை

- அலுவலக உதவியாளர்
- கணக்கு உதவியாளர்

தொடர்பு : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

T.P:074 112 9148

Email: aonebuilders2001@hotmail.com

(488)

## வேலையாட்கள் தேவை

- தொழில்நுட்ப அலுவலர் - TO
- தொழில்நுட்ப அலுவலர் உதவியாளர் - TA
- கணிய அளவையியலாளர் - QS
- கணிய அளவையியல் உதவியாளர் - A QS

தொடர்பு : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

T.P: 074 112 9148

Email:aonebuilders2001@hotmail.com

(488)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எவ் இன் உதவியை இழக்கப் போகின்றதா இலங்கை?

## சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியீடு

(வோஷிங்டன்)

**சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆதரவை இலங்கை இழக்கக்கூடுமென சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.**

12 பில்லியனுக்கும் அதிகமான கடனை மறுசீரமைப்பதற்கான சர்வதேச பத்திரதாரர்களின் முன்மொழிவை இலங்கை ஏற்றுக்கொள்ளாமையினாலேயே இந்த நிலை ஏற்படலாமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முடிந்தவரை விரைவில் மேலதிக பேச்சுவார்த்தைகளை நடத்த நம்புவதாக இலங்கை அரசாங்கம் கூறியிருந்தாலும் தொடர் கலந்துரையாடல்களை பத்திரக்காரர்களின் வழிகாட்டல் குழு நிராகரித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், எதிர்வரும் சில வாரங்களில் சமரசம் இல்லையெனில் சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணைக்கான ஆதரவு பணமும் தாமதமாகலாமென தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை ஏற்கனவே அதன் முக்கிய அரசாங்க கடன் வழங்குநர்களுடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தாலும் அதன் 2.9 பில்லியன் டொலர் திட்டத்தின் அடுத்த 337 மில்லியன் டொலர்கள் தவணைக்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு சர்வதேச பத்திரப்பதிவுதாரர்களுடன் உடன்படிக்கை தேவைப்படுகிறது.

மேலும் பத்திரதாரர்களின் முன்மொழிவுகள் "அடிப்படை அளவுருக்கள்" சர்வதேச நாணய நிதிய திட்டத்துடன் பொருந்தவில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கொழும்பு - வங்கதேசம் நேரடி விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

தனது விமான சேவைகளை விரிவுபடுத்தும் வகையில், ஃபிட்ஸ் ஏர் நிறுவனம் கொழும்பு மற்றும் வங்க தேசத்தின் டாக்கா இடையே நேரடி விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

இதுவரை கொழும்பில் இருந்து டுபாய், சென்னை மற்றும் மாலைதீவு ஆகிய மூன்று இடங்களுக்கு மட்டுமே ஃபிட்ஸ் ஏர் சேவை இயங்கியது.

அதன்படி, பங்களாதேஷ் இடையே புதிய வழித்தடங்களின் விரிவாக்கத்துடன், அவர்களின் நேரடி விமான சேவையை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

இதன் மூலம் இலங்கைக்கும் பங்களாதேஷ்க்கும் இடையிலான சுற்றுலா மற்றும் வர்த்தக துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என பொருளாதார ஆய்வாளர்கள் கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 15 இலங்கை மீனவர்களுக்கு மியன்மார் அரசு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை மீனவர்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது என அறிவித்துள்ளது.

இதனை மியன்மாரில் உள்ள இலங்கை தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை கடந்த டிசெம்பரில், இந்த குழு மியான்மார் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பின்னர் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

### 50 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு

# இலவச விசா வழங்க தயாராகும் இலங்கை

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேலும் வலுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கை வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியா உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகின்றனர்.

குறிப்பாக ரஷ்யா, ஜேர்மன், பிரித்தானியா ஆகிய நாடுகளில் இருந்து அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகை தருவதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

# இலங்கையை பொருளாதார நாடாக மாற்றுவதற்கான திட்டம் தயாரிப்பு - ஷெஹான் சேமசிங்க

(கொழும்பு)

பொருளாதாரத்தை மீட்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள சீர்திருத்த செயற்பாட்டின் மூலம் இலங்கை மக்கள் நல்ல பலன்களைப் பெற்று வருவதாகவும் எனினும் இதற்கு இருதரப்பு மற்றும் பலதரப்பு பங்காளிகளின் ஆதரவை இன்னும் எதிர்பார்க்கிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜி - 24 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதுடன், ஏற்றுமதி செயல்முறையை வலுப்படுத்தி, நேரடி வெளிநாட்டு முதலீட்டின் ஊடாக வெளிநாட்டு கடன்களைப் பெறாமல் பொருளாதாரத்தை புதிய வளர்ச்சிப் பாதைக்கு செலுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை 35% இலிருந்து 70% ஆக அதிகரிப்பதே இலங்கையின் இலக்காகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கையை பொருளாதார நாடாக மாற்றுவதற்கான நாட்டின் திட்டம் தயாரிக்கப்பட்டு



வருவதாகவும், கடல்சார் இடம் சார்ந்த திட்டத்தை உருவாக்கும் பணியை இலங்கை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (நி-6)

# மன்னார் துறைமுகத்தின் நில எல்லைகளை திருத்தியமைக்க அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

மன்னார் துறைமுகத்தின் நில எல்லைகளை திருத்தியமைக்க துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எல்லைகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் கே.டி.எஸ்.ருவன்சந்திர குறிப்பிட்டார்.

அதன்படி, திருத்தப்பட்ட எல்லைப்பகுதிகளை வர்த்தமானியில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எல்லைக்குள் மன்னார் கடற்படைத்தளமும் உள்ளடங்கியுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

புதிய வர்த்தமானியில் அது தவிர்க்கப்பட்டு துறைமுக வரம்புகள் குறிக்கப்படவுள்ளது. (நி-6)

# நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் பஸ் மோதி விபத்து

## 8 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

குருநாகல் - பொல்பித்திகம பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் இலங்கை போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

பொல்பித்திகம, ரம்பாகொடெல்ல பகுதியில் வீதியோரத்தில் லொறியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், குருநாகலில் இருந்து மடகல்ல நோக்கி பயணி களை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து அதன் பின்னால் அதிவேகமாக வந்து மோதியுள்ளது.

இந்த விபத்தில், 8 பேர் காயமடைந்த நிலையில், பொல்பித்திகம ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொல்பித்திகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

19 வயதிற்கும் 66 வயதிற்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

# சாதாரண தர பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்களினூடாக பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தபாலினூடாக பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை, 15 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டில்லியிடம் பணிந்தது குஜராத்

ஐ.பி.எல்., லீக் போட்டியில் டில்லி அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கலக்கல் வெற்றி பெற்றது. குஜராத் அணி 89 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17 வது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன.

நேற்று அகமதாபாத்தில் நடந்த போட்டியில் குஜராத் - டில்லி அணிகள் மோதின. குஜராத் அணியில் உமேஷ் யாதவுக்குப் பதில் தமிழக அணியின் சந்தீப் வாரியர் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

**திணறல் ஆரம்பம்**

குஜராத் அணிக்கு அணித் தலைவர் சுப்மன் கில், சகா இணைந்து ஆரம்பம் வழங்கினர். இஷாந்த் சர்மா இரண்டாவது ஓவரை வீசினார். இதன் நான்காவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சுப்மன் (8), அடுத்த பந்தில் பிரித்வி ஷாவிடம் "பிடி" கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின் வந்த சாய் சுதர்சன், கலீல் அகமது ஓவரில் தொடர்ந்து இரு பவுண்டரி அடித்து நம்பிக்கை தந்தார். நீண்ட நேரம் தடுமாறிக் கொண்டிருந்த சகா 2 ஓட்டங்கள் (10 பந்து) மட்டும் எடுத்து, முகேஷ் குமார் "வேகத்தில்" போல்டானார்.

இதன் பின் குஜராத் பேட்டர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். 9 பந்துகளில் 12 ஓட்டங்கள் எடுத்த சாய் சுதர்சன், ரன் அவுட்டானார். மீண்டும் மிரட்டிய இஷாந்த், அனுபவ டேவிட் மில்லரை (2) அவுட்டாக்க, குஜராத் அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 30 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தள்ளாடியது. பின் ராகுல் டிவாட்யா, அபினவ்மனோகர் இணைந்தனர்.

**ஸ்டப்ஸ் அபாரம்**

போட்டியின் 9 வது ஓவரை வீசினார் ஸ்டப்ஸ். இதன் 3 வது பந்தில் அபினவ் (8) ரிஷாப்பிடம் "பிடி" கொடுத்து திரும்பினார். 5ஆவது பந்தில், "இம்பேக்ட்" வீரராக வந்த ஷாருக்கானை "டக்" அவுட்டாக்கினார். அடுத்து வந்த "சீனியர்" ரஷித் கான், ஸ்டப்ஸ், அக்சர் பந்துகளில் பவுண்டரி விளாசினார். மறுபக்கம் டிவாட்யா (10), அக்சர் சுழலில் சிக்கினார். மோகித் சர்மாவும் (4) விரைவில் வெளியேறினார்.

17ஆவது ஓவரை வீசினார் குல்தீப். இதன் 2வது பந்தை காலரிக்கு அனுப்பிய ரஷித் கான், இப்போட்டியின் முதல் சிக்சர் அடித்தார். இவர் 24 பந்துகளில் 31 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

குஜராத் அணி 17.3 ஓவர்களில் 89 ஓட்டங்களுக்கு சுருண்டது. டில்லி சார்பில் முகேஷ் குமார் அதிகபட்சம் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**எளிய வெற்றி**

டில்லி அணிக்கு ஜேக் பிராசர் (20), பிரித்வி ஷா (7) ஜோடி சுமார் ஆரம்பம் கொடுத்தது. அபிஷேக் போரல் (15), சந்தீப் வாரியர் "வேகத்தில்" போல்டானார். ஷாய் ஹோப் (19), ரஷித் கான் சுழலில் சிக்கினார். பின் அணித் தலைவர் ரிஷாப் பன்ட் (16), சுமித் குமார் (9) இணைந்து ஆட்டமிழக்காமல் இருந்து அணியை வெற்றி பெறச் செய்தனர்.

டில்லி அணி 8.5 ஓவர்களில் 92/4 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. (ம-7)




**குறைந்த ஓட்ட எண்ணிக்கை**

நேற்று 89 ஓட்டங்களுக்கு சுருண்ட குஜராத் அணி, ஐ.பி.எல்., அரங்கில் தனது குறைந்த பட்ச ஸ்கோரை பதிவு செய்தது. இதற்கு முன் 2023ல் 125/6 ஓட்., (எதிர்-டில்லி) எடுத்ததே குறைவாக இருந்தது.

## நியூசியை சமாளிக்குமா பாக்?

### முதல் ரி20 இன்று ஆரம்பம்



பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் "ரி20" போட்டி ராவல்பிண்டியில் இன்று நடக்கிறது.

மே.தீவுகள், அமெரிக்காவில் ஐ.சி.சி., "ரி20" உலகக்கிண்ணத் தொடரின் (ஜூன் 1-29) 9ஆவது சீசன் நடக்கவுள்ளது.

இதற்கு தயாராகும் விதமாக பாகிஸ்தான் சென்றுள்ள நியூசிலாந்து அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகள் (ஏப். 18, 20, 21) ராவல்பிண்டியில் நடக்கின்றன. கடைசி இரண்டு போட்டிகள் (ஏப். 25, 27) லாகூரில் நடக்கின்றது.

இத்தொடர் உலக கிண்ணத்தொடருக்கான சிறந்த "லெவின்" அணியை கண்டறிய உதவலாம்.

பாகிஸ்தான் அணியின் ஒருநாள், "ரி20" அணியின் தலைவராக பாபர் ஆசம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் "ரி20" உலகக்கிண்ணத் தொடரில் 3ஆவது முறையாக அணியை வழிநடத்த உள்ளார். கடந்த 2021இல் அரையிறுதி வரை சென்ற பாபர் ஆசம் தலைமையிலான பாகிஸ்தான் அணி, 2022இல் இறுதிப் போட்டியில் இங்கிலாந்திடம் வீழ்ந்தது.

வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் அமீர், "சகலதுறை வீரர்" இமாத் வாசிம், ஓய்வு முடிவை திரும்ப பெற்று அணிக்கு திரும்பியது பலம். தோள்பட்டை காயத்தால் ஹரிஸ் ராப் விலகினார். மொஹமட் நவாஸ் தேர்வு செய்யப்படவில்லை.

**இதுவரை**

சர்வதேச "ரி20" அரங்கில் இவ்விரு அணிகள் 39 முறை மோதின. இதில் பாகிஸ்தான் 21, நியூசிலாந்து 17ல் வெற்றி பெற்றன. ஒரு போட்டிக்கு முடிவு இல்லை.

நியூசிலாந்து வழமையான அணித் தலைவர் கேன் வில்லியம்சன், டேரில் மிட்செல், பெர்குசன், ரச்சின் ரவிந்திரா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் ஐ.பி.எல்., 17ஆவது சீசனில் பல்வேறு அணிகள் சார்பில் பங்கேற்று வருகின்றனர். ரொம் லதாம், ரிம் சவுத்திக்கு ஓய்வு வழங்கப் பட்டுள்ளது. மைக்கேல் பிரேஸ்வெல் தலைமையில் களமிறங்கும் நியூசிலாந்து அணிக்கு மார்க் சாப்மேன், ரிம் ரொபர்ட்சன் உள்ளிட்டோர் கைகொடுக்கலாம். (ம-7)

### கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம் – 2024

## ஓல்ட் கோல்ட்ஸ் அணி 2ஆவது சுற்றுக்குத் தகுதி



கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணத் தொடரின் 7ஆவது போட்டி 30.03.2024 காலை 8.30 மணிக்கு நடைபெற்றது.

இப்போட்டியில் ஓல்ட் கோல்ட்ஸ் அணி ஞானம்ஸ் அணியை 5 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஓல்ட்கோல்ஸ் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணி 28 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிரதீ 49, சிறிகுகன் 57, நிமலேந்திரா 16, மாதவரூபன் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சேந்திரன் 6 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 2, சிவரூபன் 6 ஓவர்களில் 37 ஓட்டங்களைக் கொடுத்து 2, நிரூபன் 5 ஓவர்களில் 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

175 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய ஞானம்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

திலக்ஸன் 29, சிவரூபன் 33, பானுஸன் 26, றஜீபன் 13, ஜீவராஜ் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ட்ஸ் அணி சார்பாக நிமலேந்திரா 6 ஓவர்களில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 2, கஜேந்திரன் 5 ஓவர்களில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 2, சிறிகுகன் 5 ஓவர்களில் 25 ஓட்டங்க்ளைக் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற ஓல்ட்கோல்ட்ஸ் அணி 2023ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டால் நடத்தப்படும் பிரவு IIIக்கான தொடரில் யாழ்.மாவட்டத்தில் 1ஆம் இடத்தை (Champions) கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

# அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி

(குருமன்காடு) அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அரசியல் கைதி அரவிந்தனை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

அத்துடன் கொடிய பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு அச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனவும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 05 - 1952



மறைவு 17 - 04 - 2024

## அமரர். சின்னையா சீவரத்தினம் (சிவக்கொழுந்து)

(திக்கம் நீர்வளை பிள்ளையார் ஆலய ஆதீன கர்த்தாவும், கரணவாய் வடக்கு, வீரபத்திரர் ஆலய முன்னாள் தலைவரும்)

வீரபத்திரர் கோவிலடி,கரணவாய் வடக்கு வதிரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சீவரத்தினம் 2024.04.17 நேற்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான (அம்பாள் கபே,வவுனியா உரிமையாளர்கள்) சிவபாதம், சிவஞானசுந்தரம் சிதம்பரநாதன், சிற்றம்பலம் மற்றும் சிவராசா (ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்) சிவமலர், செல்வக்குலவீரசிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2024.04.18 இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (சி-0159)

வீரபத்திரர் கோவிலடி,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

தகவல்-குடும்பத்தினர்.
021 226 3696

# கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர் பூக்கள்

கலாமன்றத்தின் உறுப்பினர்
திரு.பகவத்சிங்கம் தனஞ்சயன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

## அமரர்.கந்தையா பகவத்சிங்கம்




அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர
தில்லைக் கூத்தன் திருவடிகளைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

(சி-060)

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்-யாழ் கிளை

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்.திரு.நாகமணி சின்னத்துரை (Bond)

தோற்றம் 31.07.1940

மறைவு 18.04.2023

அன்பின் ஊற்றாகி எம்
ஆழ்மனங்களில் பதிந்திருக்கும்
எம் அருமையானவரே
மாறுமோ எம் மனங்களில்
உம் நினைவு!
நீங்கள் எம்முடன் இல்லை என்றாலும்
உம் நினைவுகள் எம்முடனேயே
வாழும்!

(சி-0158)

கனகசபை வீதி,
மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

# இராசிபலன்

18.04.2024
சித்திரை 05, வியாழக்கிழமை,
தசமி முன்னிரவு 08.29 மணிவரை

ஆயிலியம் முற்பகல் 10.48 மணிவரை
சுபநேரம் -7.33-9.03 மணிவரை
இராகுகாலம் -1.33-3.03 மணிவரை

சித்தாமிர்தம்,
சந்திராஷ்டமம்.
கேட்டை, மூலம்

வளவன்

**மேஷம்** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமையடையும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருள் சேர்க்கையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வார், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம் பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கக்கூடும் பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்,காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், கௌரவக் குறைவான நாள்.

**ரிஷபம்** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள் இறைவழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள்.

**விருச்சிகம்** செய்தொழில் மேன்மையுண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரிய மொன்றைச் செய்து முடிப்பீர்கள்,இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்,சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** அலைச்சல் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆரோக்கியம் காணவேண்டிய நாள், சுபகாரியங்கள் மேலோங்கும் நாள்.

**தனுசு** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தினரிடையே இருந்த மனஸ்தாபங்கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும், எதிர் பார்ப்புக்கள் நிறைவு பெறும் வாய்ப்புண்டு.

**மீனம்** உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

நிகழ்கால செயல்களே எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்




### ஜாதகர்

மிதுன ராசியின் அதிபதி புதன். இவர் நீசமாகி வக்ரமாகி உள்ளார். எனவே உச்ச நிலையை அடைகிறார். இந்த வருடம் சற்று தேங்கி நின்று, தடையாகி பின் வேகம் எடுத்துச் செல்லும். உங்கள் ராசிநாதன் இருக்கும் நிலையானது உங்கள் காரியத்தில் கண் ணாக இருக்கச் செய்யும். சுயநலமாக சிந்திக்கத் தூண்டும் பிறருக்கு உதவி செய்து, நீங்கள் ஏமாற்றம் அடைந்ததால் ஏற்பட்ட பின் விளை வாகவும் இருக்கக் கூடும். உங்கள் செயல்களில் சற்றே கிரிமினல் தனங்களை சேர்த்து கோர்த்து விடும். உங்களை சுற்றியுள்ளவர்கள் உங்களை, 'ஆள் முன்ன மாதிரி இல்லப்பா ரொம்ப மாறிட்டான்' என முனகுவர்.

### தனம்

காசேதான் கடவுளடா என்ற எண்ணம் வலுக்கும். எதிலும் லஞ்சப் பணம் வருவதற்குரிய அத்தனை வழிகளையும் கண்டறிவீர்கள். உங்களின் விடாமுயற்சி வெற்றியாகி பணம் வந்து கொட்டும். பணம் எண் ணுவதற்கு வசதியாக பணம் எண்ணும் மெஷின் வாங்கி வைத்துக் கொள்வீர்கள். அந்த பணம், அதிக யோசனையைக் கொடுத்து வீட்டில் எவ்வளவு பணம் இருந்தால் இன்கம் டேக்ஸ்காரன் வந்து அள்ளிவிட்டுப் போய்விடுவான் என நீங்களே சிந்தித்து சிந்தித்து, நிறைய தொழில்களில் சைலண்ட் பார்ட்னர் ஆகி விடுவீர்கள். சிலர் தங்கள் வாரிசுகளின் பெயரில் பெரிய தொழில் கூடங்களை திறந்துவிடுவீர்கள். சிலர் வெளிநாட்டிற்கு சென்று முதலீடு செய்து விடுவீர்கள்

### வாக்கு

இவ்வளவு பணம் கையில் புழங்கும் போது, வாக்கு கட் அண்ட் ரைட்டாக தானே இருக்கும். நிறைய வெளிநாடு சுற்றுலா சென்று, செம ஜாலியாக இருப்பீர்கள்.

### சகோதரம்

இவ்வளவு பணம் புழங்கும்போது, உங்கள் உடன்பிறப்புகள் சும்மா இருப்பார்களா? உடனே இருக்கிற பணத்தை, சாக்கில் திணித்து மூட்டை கட்டிக் கொண்டு, அரசியல் கடலில் தொபுக்கடீர் என குறித்து விடுவார்கள். அதல்லாமல் அரசியலில் தங்களுக்கு என ஒரு முக்கியமான பதவியை பிடித்து வைத்துக் கொள்வார்கள் அல்லது அரசாங்கத்தில் மிகப்பெரிய பதவியை நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொள்வர். அரசு சார்ந்த ஒப்பந்தம் நிறைய பண்ணிக் கொள்வர். மிதுன ராசி யார் நன்றாக இருக்கிறார்களோ இல்லையோ உடன் பிறப்புகள் சரிதான்,

### வீடு

பணப் புழக்கம் அதுவும் அன் அக்கவுண்ட் மணி இருக்கும்போது பங்களா, மாளிகை கட்டாவிட்டால் தான் ஆச்சரியம். வீட்டிற்குள் நீச்சல் குளம் வைத்து கட்டுவீர்கள். முதலீடாக நிறைய, மனை, வாகனம், வயல், தோட்டம் என மானாவாரியாக வாங்கி குவிப்பீர்கள். என்ன ஒன்று, உங்கள் பெயரில் ஒன்றையும் பதிவு பண்ண இயலாது. உங்கள் தாயார் உங்கள் கூடவே இருந்து, உங்கள் செல்ல செல்லத்தை பார்த்து மகிழ்வார்.

மீனவர்கள் தங்கள் தொழிலின் ஏற்றுமதி வணிகத்தை விரிவுபடுத்துவர். விவசாயிகள் வணிகப் பயிர் வேளாண் செய்து, தத்துவமாக வெளிநாட்டுக்கு அனுப்புவர். உங்களில் சிலர் கடலில் எண்ணெய் எடுக்கும் பிரிவில் அணியில் சேரலாம்.

### சந்ததி

மிதுன ராசி பெண்களுக்கு கரு தங்குவதில் சற்று சிரமம் ஏற்படும். எனவே கர்ப்பமான பெண்கள், முழு மருத்துவரின் கண்காணிப்பில் இருந்தால் அழகாக, ஆரோக்கியமான குழந்தையை பெற்று எடுக்கலாம். ரொம்ப நாள் குழந்தைக்காக மருத்துவ உதவி பெற்றவர்கள், இந்த வருடம் செயற்கை கரு வளர்ச்சி மூலம் வாரிசு கிடைக்க வழிவகை உண் டாகும் உங்களின் சில பெண் வாரிசுகள், கல்வி விடயமாக வெளிநாடு செல்வர்.

பங்கு வர்த்தகம் எத்தனை வருமானம் தருகிறதோ அத்தனை இழப்பும் தரும். உங்களுக்கு இப்போது உண்டாகும் காதலி மிகப்பெரிய அந்தஸ்து உள்ள இடத்தை சேர்ந்தவராக இருப்பார்.

கலைஞர்கள் சினிமா அல்லது டிவியில் மிகப் பெரிய வாய்ப்பு பெறுவர். அட்சய நடன இசை கிராமிய கலைஞர்களும் தங்களது கலை உலக பயணத்தில் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்துவர். உங்களின் சிலரின் மருமகன் அரசியல் உளவியல் சேர்ந்தவராக அமைவார்,

### நோய்

இந்த வருடம் உங்கள் தந்தைக்கு ஒரு அறுவை சிகிச்சை நடக்கும் சூழ்நிலை ஏற்படும். உங்களுக்கு காலில் அடிபடக் கூடும். வெளிநாட்டு தொழிற்சாலையில் பணிபுரியும் வாய்ப்பு உண்டு. அரசியலில் மந்திரிகளுக்கு உதவியாளராக இருக்க முடியும்.

### திருமணம்

இந்த வருடம் திருமணமாக வேண்டியவர்களுக்கு திருமணம் கைகூடி வரும். வரன் மிகவும் புகழ்பெற்றவராக இருப்பார் அல்லது அரசியல் பின்புலம் உடைய குடும்பமாக அமைவார். பத்திரிகை துறை அல்லது டி.வி போன்றவற்றை சேர



ந்தவராக அமைவர். எது எப்படி இருப்பினும் திருமணம் திருமண சம்பந்தம் மட்டுமின்றி, இது தொழில் சம்பந்த நிகழ்வாகவும் இருக்கும்.

### எதிர்பாராத இடையூறு

இந்த வருடம் உங்கள் துன்பங்களின் காரணம் உங்கள் தொழிலும், அதிலுள்ள கள்ளத்தனமும், உங்களின் அளப்பரிய முதலீடுகளும் தான். ஏன் உங்கள் அழகான வீடாகக் கூட இருக்கலாம். இது சம்பந்தமாக வழக்கும் ஏற்படும். எனினும் அதிலிருந்து தப்பிவிடுவீர்கள்

### அதிர்ஷ்டம்

யோக நிகழ்வுகள் நன்றாகவே இருக்கும். ஒன்று உங்களுக்கு வந்து கொண்டிருக்கும் அளப்பரிய அதிஷ்டத்தை பிறரிடம் கூறி பெருமை அடித்துக்கொள்ள முடியாது. இன்னொன்று வருகிறது புறவாசல் வழியாகவே வரும். வேறு சிலரின் பணத்தையும் நீங்கள் ரகசியமாக வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆக, இந்த வருடம் உங்களுக்கு அதிஷ்டம்இருக்கு ஆனா இல்லை எனும் நிலைமை தான். இந்த அதிஷ்டசாலி லீகலில் உங் கள் தாய்மாமனும் மூத்த சகோதரனும் ஒட்டி உற வாடுவார்கள்.

### தொழில்

இந்த வருடம் மிதுன ராசியாரின் தொழில் வளம் மிக பெருகும். செழிப்பாக வளரும். உங்கள் யூகங்கள் தொழிலை மிக மேன்மையாக அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும். சில வாரிசுகளின் பயணமும், உழைப்பும் தொழிலை முதன்மைக்கு நகர்த்தும். உங்கள் தொழில் வெளிநாட்டிலும் பரவி பரவ சமாகும். இந்த வருடம் தொழில் தொடங்கலாமா என யோசித்து கொண் டிருந்தவர்கள் செகண்ட் தாட் இன்றே சட்டென்று தொழில் தொடங்கி விடுங்கள். அதற்கான தரவுகளும், அரசு ஆதரவும் அபரிதம கிடைக்கும்.

### லாபம்

உங்கள் தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும் அதேநேரத்தில், நீங்கள் அரசாங்கத்துக்கு அதிக அளவில் வரி செலுத்தும் நிலை உண்டாகும்.

### அரசியல்

அரசியலில் நீங்கள் நேரடியாக நுழையாவிட்டாலும் உங்கள் உடன் பிறப்பு, தந்தை, வாழ்க்கைத் துணை, மாமியார் என இவர்களில் யாரையாவது அரசியலில் இறக்கிவிடுவீர்கள். நிச்சயமாக பதவியை அடைந்து விடுவீர்கள்.

### விரயம்

உங்கள் விரையாதிபதி உச்சம். எனவே செலவுகள் அதிகமாக இருக்கும். அதனை முதலீடாக மாற்றிவிடுவீர்கள். வெளிநாட்டு பயணம் மிக அதிகமாக அமையும். நிறைய சுய செலவுகள் ஆகும் என்பது நிம்மதி.

### பரிகாரம்


சனி + செவ்வாய்க்கு தீபமேற்றி பரிகாரம் செய்யுங்கள். புதன் கிழமை, மரிக்கொழுந்து மாலை, பாசிப்பருப்பு கலந்த பொங்கலுடன் அகலில் இலுப்பை எண்ணெய் ஊத்தி, 23 மிளகாய் பச்சை நிற துணியில் மூட்டை கட்டி, பச்சை நிற திரியிட்டு ஏற்றவும். அருகிலுள்ள பள்ளிகளின் தேவையை அறிந்து உதவுங்கள். இந்த புது வருடம், மிதுன ராசிக்கு 100% அதிஷ்டம் தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலாளிகளைத் தாக்கிவிட்டு 35 ஆடுகளை களவாடியவர் கைது

## 15 ஆடுகளும் மீட்பு



(நெளுக்குளம்)

மல்லிகைத்தீவு பகுதியில் ஆட்டு காவலாளிகளை தாக்கி விட்டு ஆடுகளை களவாடிய குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரம், மல்லிகைதீவு பகுதியில் நேற்று முன்தினம் ஆட்டு மந்தையில் இருவர் காவல் கடமையில் இருந்த போது திடீரென வந்திறங்கிய குழுவினர் ஆடுகளை களவாடி செல்ல காவல் கடமையில் இருந்த இருவரையும் தாக்கிவிட்டு 9 இலட்சத்தி முப்பத்தையாயிரம் பெறுமதியான 35 ஆடுகளை கொண்டு சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான இருவரில் ஒரு நபர் காயங் களுக்கு உள்ளாகிய நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் புதுக்குடி யிருப்பு பொலிஸாருக்கு தெரி யபடுத்தியதனையடுத்து சந் தேகத்தின் பேரில் வற்றாப் பளை பகுதியை சேர்ந்த 32 வயது டைய குடும்பஸ்தர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் 15 ஆடுகள் மீட்கப்பட்டு, ஆடுகளை கடத்தி செல்ல பயன்படுத்திய கப்ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபரை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலை யத்திற்கு கொண்டு சென்று விசா ரணைகளை முன்னெடுத்து வருவதோடு விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதி வான் நீதிமன்றில் ஆஜர்படுத்த வுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை புதுக்குடி யிருப்பு பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரி ஹெரத் தலைமை யிலான குழுவினரே குறித்த கைது நடவடிக்கையை மேற் கொண்டிருந்தமை குறிப்பிட த்தக்கது. (நி-6-299)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.எல் விளையாட்டுக்கழகம் வலிகாமம் லீக் அணிகளுக்கி டையில் நடத்தும் 40 வய திற்கு மேற்பட்டவர்களுக்கான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அராலி ஏ.எல் விளையாட்டு க்கழக மைதானத்தில் நடை பெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை சென் லூட்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீசியன் அணி மோதவுள்ளது.

அதேவேளை வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனு மதியுடன் நவசக்தி விளை யாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட போட்டிகள் குறித்த கழக மைதானத்தில் நடை பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு கொற் றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து அண்ணாசிலையடி யூத் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு கம்பர்மலை யங்க ம்பன்ஸ் அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-6-90)



"விழிகள் செய்யும் விந்தையை விரல்கள் செய்யக் காண்பீர்" எனும் தொனிப்பொருளில் பார்வையற்றோருக்கான அறக் கட்டளை நிலையம் ஏற்பாடு செய்த திறன் விருத்திக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை யாழ்.தந்தை செல்வா மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# மாருதப்புரவீகம் இதழ்-5

## மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச கலாசார பேரவையும் வலி வடக்கு தெல்லிப் பழை பிரதேச செயலகம் இணைந்து வெளியிட்டு வருகின்ற பருவ வெளி யீடான மாருதப்புரவீகம் மலரின் இதழ் 5 இனை இவ்வருட நடுப் பகுதியில் வெளியிட பிரதேச கலாசார பேரவை தீர்மானித்துள்ளது.

எனவே இப்பிரதேசம் சார்ந்தவர்க ளிடமிருந்து வலி. வடக்கு பிரதேசம் சார் தொல்லியல், வரலாறு, சமூக வியல், விவசாயம், மானிடவியல், பண்பாட்டியல், கல்வி, சமூக பொரு ளாதாரம், கலைகள், ஆன்மீகம் போன்ற துறைசார் ஆக்கங்கள் ஆய்வுக் கட்டுரைகளாகவோ பத்தி எழுத்துக்களாகவோ கட்டுரைகளா கவோ மற்றும் புனைகதை இலக் கியங்களாகவோ எதிர்பார்க்கப்படு கின்றன.

ஆகவே குறித்த மலருக்கான தரமான ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 30.04. 2024 ஆம் திகதிக்கு முன் "தலைவர், பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், வலி. வடக்கு தெல்லிப்பழை." எனும் முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்து ள்ளார். (நி-6)

# மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். (நி-6)

# ஊர்காவற்றுறையில் கண் பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரி சோதனை செய்து தெரிவு செய்யும் கண்பரிசோதனை முகாம் நாளை சனிக் கிழமை காலை 8 மணிதொடக்கம் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவ மனையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயா ளர்களுக்கான கண்புரை சத்திர சிகிச்சை யாழ்.போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவை யுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரி சோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்து மாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு : 1991 - இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L .வாகனப்புகை பரிசோதகர் (pvt)<br>எதிர்பார்ப்பு-அரச உத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: B/14484 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கிபா-24<br>உயரம் : 5'1"<br>தகைமை/தொழில்: Civil Engineering, DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10704 |
| பிறப்பு:1994 -இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 39<br>உயரம்:6'1"<br>தகைமை/தொழில்- Bsc(Civil Engineer), civil project engineer (Aus)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14486 | பிறப்பு- 1984- இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: NDT,Teacher<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/13933 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்(Germany)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14489 | பிறப்பு -1993 - இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம் :5'2"<br>தகைமை/தொழில்: A/L. முன்பள்ளி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம்<br>தொ.இ: G/13936 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம் : அச்சுவினி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:-Civil Engineering.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, ஆசிரியர்<br>தொ.இ: B/14491 | பிறப்பு -1997-இந்து<br>நட்சத்திரம் - கேட்டை<br>கி.பா:35<br>உயரம் : 5'5'<br>தகைமை/தொழில்: NDT, Teacher<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் அல்லாத உத்தியோகம்<br>தொ.இ: G/13943 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# காசா அகதிமுகாம் மீது தாக்குதல் 7 குழந்தைகள் உட்பட 13 பேர் பலி



(காசா)
பாலஸ்தீனத்தின் மத்திய காசாவில் உள்ள அல்-மகாஸி அகதிகள் முகாமில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 7 குழந்தைகள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 25 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினரிடையேயான போர் மற்றும் சமீபத்தில் ஈரான், இஸ்ரேல் இடையே ஏற்பட்டுள்ள தாக்குதல் போன்றவை அப்பிராந்தியத்தின் அமைதியை சீர்குலைத்துள்ளது.

போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந் நிலையில் மத்திய காசாவில் உள்ள அல்-மகாஸி அகதிகள் முகாமில் நேற்று முன்தினம் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 7 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். 25 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். (நி-6)

## விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட ராட்சத கருந்துளை

### ஐரோப்பிய விண்வெளி நிறுவனம்

விண்வெளியில் பால் வீதியில் ஒரு புதிய உறங்கும் ராட்சத கருந்துளை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது விண்மீன் மண்டலத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கருந்துளைகளில் மிகப்பெரியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது கிரகத்தில் இருந்து இரண்டாயிரம் ஒளியாண்டுகளுக்கும் குறைவான தொலைவில் உள்ள அக்விலா விண்மீன் தொகுப்பில் தூங்கும் ராட்சத கருந்துளையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது சூரியனை விட கிட்டத்தட்ட 33 மடங்கு எடை கொண்டது.

மேலும், பால் வீதியில் இவ்வாறான பாரிய நட்சத்திர தோற்றம் கொண்ட கருந்துளை கண்டு பிடிக்கப்படுவது இதுவே முதல் முறை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள தூங்கும் ராட்சத கருந்துளை, பாரிய நட்சத்திரங்கள் எவ்வாறு உருவாகின்றன மற்றும் வளர்கின்றன என்பது பற்றிய அறிவியல் கருத்துக்களை சவாலுக்குட்படுத்தியுள்ளது. (நி-6)

## சார்லஸின் உருவப்படத்துடன் வெளியாகிய பணத்தாள்கள்

(லண்டன்)
பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸின் படத்துடன் புதிதாக அச்சிடப்பட்ட பிரித்தானிய பணமான பவுண்டு தாள்கள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என பிரித்தானிய வங்கி அறிவித்தது.

பிரித்தானிய ராணி எலிசபெத் மறைந்த பின்னர் பிரித்தானியாவின் மன்னராக மூன்றாம் சார்ல்ஸ் பொறுப்பேற்றார்.

இதனையடுத்து, மன்னர் மூன்றாம் சார்லஸின் படத்துடன் பிரித்தானிய பணமான பவுண்டு வெளியாகும் என பிரித்தானிய வங்கி அறிவித்தது. அதன்படி, பிரித்தானிய நாட்டு பணத்தின் தாள்களான 5,10,20 மற்றும் 50 பவுண்டுகளில் மன்னரின் படம் அச்சிடப்பட்டுள்ளது.

மன்னர் மூன்றாம் சார்லஸ் படத்துடன் அச்சிடப்பட்ட குறித்த பவுண்டு தாள்களை, பெக்கிங்காம் அரண்மனைக்குச் கொண்டுச் சென்ற இங்கிலாந்து வங்கி யின் ஆளுநர் ஆண்ட்ரூ பெய்லி மன்னர் சார்ல்சிடம் காட்டி ஒப்புதல் பெற்றுள்ளார்.

இந்த புதிய பவுண்டு தாள்கள், எதிர்வரும் ஜூன் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தற்போது நடைமுறையில் உள்ள, மறைந்த ராணி எலிசபெத் படத்துடனான பண தாள்களுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# போதைப் பொருளுக்கு எதிரான சட்டமூலம் எதிர்ப்பிற்குள்ளான பிரித்தானிய பிரதமர்



(லண்டன்)
15 வயதுக்குட்பட்டவர்கள் புகைப்பிடிப்பதை தடுக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள சட்டமூலம் எதிர்ப்பில், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சட்டமூலம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அந்நாட்டு பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

இதன்மூலம் 2009 ஜனவரி முதலாம் திகதிக்கு பின்னர் பிறந்த எவருக்கும் புகையிலை பொருட்கள் விற்பனை செய்வது குற்றமாக்கப்படும். புகைப்பிடிக்கும் பழக்கம் அற்ற சிறந்த தலைமுறையை உருவாக்கும் நோக்கில் பிரதமர் ரிஷி சுனக் இந்த சட்ட மூலத்தை கொண்டுவந்துள்ளார்.

எனினும், முன்னாள் பிரதமர்களான லிஸ்ட்ரஸ் மற்றும் போரிஸ் ஜோன்சன் ஆகியோர், இந்த சட்ட மூலத்துக்கு எதிராக வாக்களிக்க திட்டமிட்டுள்ளதாக, பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

# வரல...

# வெள்...

- 18 பேர் உயிரி...
- சுமார் 100 வி...
- தண்ணீரில் ...
- ரயில்கள், பே...


(டுபாய்)
ஐக்கிய அரபு ...
வெள்ளம் கா...
பாதிக்கப்பட்டன...



பாலைவன பகுதிகளான வளைகுடா நாடுகளில், அவ்வப்போது மழை பெய்வது ஆச்சரியம் என்றாலும், சில நேரங்களில்

# 400 ஆ...

# டென்மார்க்...



(கோபன்ஹேஹன்)
டென்மார்க் தலைநகர் கோபன்ஹேஹனின் மத்தியிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க பழைய பங்குச் சந்தை கட்டடம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை காலை தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த கட்டடம் 17 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ாறு காணாத கனமழை!
# ளத்தில் மிதக்கும் டுபாய்!

ிழப்பு
மான சேவைகள் ரத்து
மிதக்கும் சொகுசு கார்கள்
ருந்து சேவைகள் ரத்து



**நாடுகளில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத மழை, ரணமாக, விமானப் போக்குவரத்துக்கள் ்.**



அதிகப்படியான மழை பொழிவது வாடிக்கையான ஒன்றுதான். ஆனால் அவை பெரும்பாலும் செயற்கை மழையாக இருக்கும் நிலையில், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு வளைகுடா நாடுகளுக்கு அருகே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ஓமான், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் வரலாறு காணாத மழை பெய்து வருகிறது. ஓராண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் பெய்துள்ளது.

துபாய் சர்வதேச விமான நிலையத்தில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் வந்து செல்வது வழக்கம். ஆனால் விமான நிலையத்திற்குள் தண்ணீர் தேங்கி இருப்பதால் பாதுகாப்பு கருதி நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த விமானங்கள் அருகில் உள்ள பிற விமான நிலையங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. நேற்றுக் காலை நிலவரப்படி இரண்டு மணி நேரத்திற்கு மேலாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் சர்வதேச விமான பயணிகள் கடும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

வரலாறு காணாத மழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு. துபாய் விமான நிலையம் மட்டுமின்றி, ஐக்கிய அரபு அமீரகத்தின் பல்வேறு நகரங்களிலும் முழங்கால் அளவு வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் மெட்ரோ ரயில்கள், பேருந்துகள், ரயில்கள் ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலான இடங்களில் சொகுசு கார்கள் தண்ணீரில் மூழ்கி இருப்பதால் அவை சேதம் அடையக் கூடிய சூழல் உருவாகியுள்ளது. வீடுகளிலும் கூரைகளில் இருந்தும் தண்ணீர் வடிவதாக பல்வேறு புகார்கள் எழுந்து வருகிறது.

மாறிவரும் காலநிலை காரணமாக இந்த கன மழை பெய்திருப்பதாக அந்நாட்டு வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்வதற்கான வாய்ப்பு இருப்பதால், சேத அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே ஓமான் நாட்டில் கனமழை காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி இதுவரை குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ண்டுகால பழமையான
## ் பங்கு சந்தை கட்டடத்தில் தீ





ாற்றாண்டின் போர்சன் கரின் பழமையான கட்டங்களில் ஒன்றாகும்.

தீ பரவியதும் கட்டடத்திற்குள் ருந்த அனைவரும் வெளியறியுள்ளனர். இதுவரை ருவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சில வரலாற்று ஓவிங்களை மக்கள் விரைந்து மீட்டுள்ளனர். 400 ஆண்டு கால டென்மார்க் கலாசார பாரம்பரியம் தீப்பிடித்து எரிந்துள்ளதாக அந்நாட்டு கலாசார அமைச்சர் ஜாகோப் ஏங்கல்-ஷ்மிட் தெரிவித்துள்ளார்.

நாற்பது தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பங்குச் சந்தை கட்டடத்தில் தீயில் கருகி சரிந்து வீழ்ந்த கோபுரத்தில் செங்குத்தாக முறுக்கப்பட்ட நான்கு டிராகன்களின் வால்கள் மற்றும் மூன்று கிரீடங்கள் அண்டைய நாடான நோர்வே மற்றும் ஸ்வீடனுடனான நெருங்கிய உறவைக் குறிப்பதாக இருந்தன. (நி-6)

# ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம்
## ஐ.நா அமைப்பு அச்சம்

(ஜெனீவா)

ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என ஐ.நா வின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு அச்சம் வெளியிட்டு ள்ளது.

சிரிய தலைநகரில் உள்ள ஈரானின் துணை தூதரகத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலிற்கு ஈரான் பதில் தாக்குதலைமேற்கொண்டுள்ள நிலையில் தனது நாடு அதற்கு பதிலடி கொடுக்கும் என இஸ்ரேலின் இராணுவதளபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு காரணமாக ஞாயிற்றுக்கிழமை ஈரான் தனது அணுஉலைகளை மூடியது என தெரிவித்துள்ள ஐஏஈஏ அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரபெல் குரொசி திங்கட் கிழமை அவை திறக்கப்பட்டன எனவும் குறிப்பிட்டுள்ளார்.



இஸ்ரேல் அணு உலைகள் மீது தாக்குதலை மேற் கொள்ளும் சாத்தியம் குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள அவர் நாங்கள் எப்போதும் அது குறித்து அச்சமடைந்துள்ளோம் கடும் பொறுமையை நிதானத்தை கடைப்பிடிக்க கோருகின்றோம் என தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி கொள்ளை

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா நகரில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை வழிமறித்து அவர்களின் குழந்தை மீது கத்தியை வைத்து தாயாரை மிரட்டி நகைகள் பறித்ததுடன் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் வவுனியா தெற்கில் கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு செல்லும் வீதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், குறித்த பெண் கடவுச்சீட்டு காரியாலத்திற்கு முன்பாக விண்ணப்படிவம் நிரப்பும் தொழிலில் ஈடுபட்டு வருபவர்.

தனது தொழில் நிமித்தம் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் தனது குழந்தையுடன் பயணித்த சமயத்தில் வீதியில் மறைந்து நின்ற முகமூடியணித்த மூவர் குறித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து குழந்தையின் கழுத்தில் கத்தியினை வைத்து மிரட்டி அணிந்திருந்த நகைகள் மற்றும் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-250)



சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தின் இளைப்பாறு மண்டபம் மற்றும் வேளாண் களஞ்சிய அறைக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் கலைமகள் விளையாட்டு கழகத்தின் தலைவர் கு.சர்மிலன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 100 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 160 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 130 | 150 | 160 |
| தக்காளி | 100 | 50 | 80 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 100-130 | 160 |
| கோவா | 200 | 180 | 150 | 250 | 300 |
| கரட் | 350 | 400 | 400 | 350 | 400 |
| பூசணி | 160 | 130 | 80 | 80-100 | 120 |
| புடோல் | 120 | 200 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 250 | 250-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 400 | 280 | 350 |
| பாகற்காய் | 250 | 300 | 250 | 250-300 | 300 |
| வெண்டக்காய் | 120 | 150 | 130 | 120-160 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 300 | 120 | --- | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 220-250 | 120 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 220 | 300 |
| பீற்றூட் | 300 | 250 | 250 | 250 | 350 |
| கறிமிளகாய் | 350 | 300 | 500 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 350 | 400-900 | 800 |
| போஞ்சி | 200 | 300 | 300 | 170 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 60 | --- | 140 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 50 | 50-100 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 300 | 400-600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 100 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | --- | 400 |
| வெங்காயப்பூ | --- | 300 | 150 | --- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | --- | --- | 100 | 80 | --- |

# இன்று ஒரு தகவல் 98



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நான் யார்?

நான் யார் தெரியுமா? அப்படி என்று கம்பீரமாக கேட்பவர்கள் நமது ஊரிலே நிறைய பேர் உண்டு. அதை நீங்களே தான் கொஞ்சம் சொல்லுங்களேன் என்று கேட்டால்... அதை ஏன் என்னிடம் கேட்கின்றாய் ஊரிலே நாலு பேரை கேட்டுத் தெரிந்து கொள் என்று சொல்லிவிடுவார்கள்.

அந்த அளவுக்கு அவர் தன்னைப்பற்றி தெரிந்து வைத்து இருக்கின்றார்.

ஒரு ஞானி மனிதனைப் பார்த்து கேட்டார். "நான் நான் என்று அடிக்கடி சொல்லிக்கிறீயே"! அது எங்கே இருக்கிறது அந்த நான்?

குழந்தையா இருந்தியே அது நீயா?
சிறுவனா வளர்ந்தியே அது நீயா?
அதன் பிறகு வாலிபனா ஆனாயே அது நீயா?
அதன் பிறகு வயோதிபனா ஆனாயே அது நீயா?

இதிலே எது நீ? என்று கேட்டு விட்டு நான் என்பது ஒரு மனக் கொள்கையே தவிர அதற்கு வடிவம் ஏதும் இல்லை என்கிறார் அந்த ஞானி.

ஒரு அரசன் ரொம்ப நாள் சந்தோஷமாக வாழவேண்டும் என்று ஆசைப் பட்டான். அதற்கு என்ன வழி என்று எல்லோரையும் கேட்டான். அகந்தை இல்லாதவன் நீடுழி வாழ்வான் என்று ஒருத்தர் சொன்னார். உடனே அப்படி வாழ வேண்டும் என்ற முடிவிற்கு அந்த அரசன் வந்துவிட்டான். யோசித்துப் பார்த்தான்.

பணம், வரட்டுக் கௌரவம் அது இரண்டும் அதிகரிக்கும் போது தான் அகந்தை அதிகரிக்கிறது. அதனாலே அகந்தை இல்லாமல் இருக்க வேண்டும் என்றால் எளிமையாக வாழவேண்டும் என்று தீர்மாணம் செய்தான். உடனே ஆடம்பரமான உடைகளையெல்லாம் விட்டுட்டு பழைய ஆடையை எடுத்து அணிந்து கொண்டான், அரண்மனையை விட்டுட்டுப் போய் ஒரு குடிசையிலே இருந்து கொண்டான்.

யாரும் என்னைப் பார்த்து வணங்கக் கூடாது என்று உத்தரவு வேற போட்டுவிட்டான். கொஞ்ச நாள் ஆகிவிட்டது. அதன் பிறகு அவன் தன்னைப் பற்றி நினைத்துப் பார்த்தான். ஆகா! என்னை மாதிரி எளிமையாக வாழுகின்றவர்கள் இந்த உலகத்திலே யாருமே கிடையாது என்ற நினைப்பு வந்தது.

அந்த நினைப்பே ஒரு அகந்தையாக அவனுக்கு உள்ளே குத்தியிருக்கிறதை பின்பு தான் புரிந்து கொண்டான். இதைப்பற்றி ஒரு ஞானியிடம் சொன்னான். அதற்கு அவர் "இதோ பார் மன்னா! நீ அரசனைப் போல உடை உடுத்திக் கொள்! அரசனைப் போல வாழு! அரசன் என்ற மரியாதையை மக்கள் உனக்கு கொடுக்கட்டும்". ஆனால் மனதிற்குள்ளே நீ எளிமையாக இரு! என்று சொல்லி விட்டு போய்விட்டார். இதற்குப் பிறகு தான் எளிமை என்றால் என்ன என்பதை அந்த அரசன் புரிந்து கொண்டான்.

ஒரு யூத குரு இருந்தார். 'ஷ்மெல்னோ' என்று பெயர் அவருக்கு. அவர் ஒரு புது ஊருக்கு குருவாக வந்து சேர்ந்தார். அந்த ஊர் ஜனங்கள் எல்லோரும் பார்த்தார்கள். ஒரு இடத்திலே கூடினார்கள். நமது ஊருக்கு புதிதாக ஒரு குரு வந்திருக்கிறார். என்ன செய்யலாம் என்று ஆலோசனை செய்தார்கள்.

இன்றைக்கு சாயந்தரம் அவருக்கு நமது ஊர் மக்கள் சார்பிலே ஒரு பெரிய வரவேற்பு கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். வரவேற்பு விழாவிலே நீங்க வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று அந்த குருவிடம் காலையிலே கேட்டுக் கொண்டார்கள்.

அவரும் சரி என்று ஒத்துக் கொண்டார். வந்தவர்கள் போய்விட்டார்கள். அதன் பிறகு அந்த குரு என்ன செய்தார் தெரியுமா? தன்னோட தனி அறைக்குள்ளே போய் கதவை சாற்றிக்கொண்டார். எதையோ திருப்பித் திருப்பித் சொல்லிக் கொண்டே அந்த அறைக்குள்ளே குறுக்கேயும் நெடுக்கேயும் நடந்து கொண்டே இருந்தார்.

அவர் சொன்ன வார்த்தைகளிலே ஒன்று இரண்டு வெளியே இருந்தவர்கள் காதிலேயும் விழுந்தது! கொஞ்ச நேரம் கழித்து அந்த மதகுரு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். வெளியே நின்று கொண்டிருந்த மக்கள் எல்லோரும் அவரைப் பார்த்து என்னங்க அந்த அறைக்குள்ளே எதையோ திரும்பத் திரும்பத் சொல்லிக் கொண்டு இருந்தீர்களே... அதோட அர்த்தம் என்ன என்று நாங்கள் தெரிந்து கொள்ளலாமா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? வேறு ஒன்றுமில்லை இன்றைக்கு சாயந்தரம் நடக்கப்போகிற விழாவிலே நீங்க எல்லோரும் என்னை இந்திரனே- சந்திரனே என்று எல்லாம் புகழப்போறீர்கள். அந்த வார்த்தைகளைக் கேட்கும் போது எனக்கு அகந்தை அதிகமாகிவிடும் அதனாலே அந்த வார்த்தைகளை நானே திரும்பத் திரும்பத் சொல்லி பார்த்துக் கொண்டேன். இப்போது அந்த வார்த்தைகள் எனக்குப் பழகிப் போய்விட்டது, புளித்துப் போய்விட்டது. இனிமேல் சாயந்தரம் நீங்கள் எவ்வளவு தரம் அதைச் சொன்னாலும் எனக்கு அகந்தை வராது! என்றார்.

அதனாலே -அதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்ன... அகந்தைக்கு எப்பவும் இடம் கொடுக்காமல் இருப்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். நான் என்கின்ற எண்ணம் இருக்கவே கூடாது.

என்னனை ஒருவராலையும் அசைக்க முடியாது என்று அடித்து சொல்லிக் கொண்டு இருந்தார் ஒருத்தர். ஒரு நாள் திடீரென்று அவர் எலும்புமுறிவு வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டார். என்ன ஆகிவிட்டது என்று விசாரித்தார்கள். என்னை யாருமே அசைக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்த அவரை ஒரு சின்ன வாழைப்பழத்தோல் அசைத்து விட்டதாம்! மறுபடியும் அவர் அசைவதற்கு எவ்வளவு நாள் ஆகுமோ? யாருக்குத் தெரியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் இடம்பெற்ற வடமாகாண புத்தாண்டு விழா




(குருமன்காடு)

வடக்கு மாகாண புத்தாண்டு விழா வவுனியா வடக்கு நெடுங்கேணி மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை, வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம், தொழில் துறைத் திணைக்களம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும் வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலகமும் இணைந்து நடத்திய குறித்த நிகழ்வானது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றதுடன் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது பாரம்பரிய முறையில் விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றதோடு, தமிழ் சிங்கள கலை நிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், மறைந்து செல்லும் தமிழர் பாரம்பரிய கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகள், பாரம்பரிய உணவு கண்காட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலாளர் பீ.ஏ.சரத் சந்திர, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன், அரச அதிகாரிகள், வவுனியா வடக்கு கல்வி வலய அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-250)

## வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன் மருத்துவமனையில்

### வரணியில் சம்பவம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைநதுள்ளார்.

வாள்களுடன் வந்த குழுவொன்று மேற்படி இளைஞன் மீது சரமாரியாக வாள்களால் வீசி தாக்குதல் நடத்தி விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் படுகாயமடைந்த இளைஞர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி வன்முறைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

## உண்ணாவிரதமும் நினைவேந்தலும்

(கிளிநொச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக்கிளையின் ஒழுங்கமைப்பில் தியாகத் தாய் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல், நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கிளிநொச்சி சேவைச் சந்தை முன்றலில் அடையாள உண்ணாவிரதமும் நினைவேந்தலும் இடம்பெறவுள்ளது. (நி-6)

## குடும்பஸ்தர் ஒருவர் மீது தாக்குதல்

(குருமன்காடு)

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபர் ஒருவருடன் சேர்ந்து புளியங்குளம் பொலிஸார் தன்னை தாக்கியதாக தெரிவித்து வவுனியா மருத்துவமனையில் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, சின்னப் பூவரசங்குளத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக தாக்கப்பட்டவரின் மனைவி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன், மருத்துவமனை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-6-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3092


**நிருஜா**




**வசந்தன்**




**ரஞ்சினி**




**ரேணுகா**




**மதுமிதன்**




**சாரங்கன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 458





"யானை இறவுத் துறையை அடைந்ததும் அவர்களுடைய பிரயாணம் தடைப்பட்டு விட்டது. வழக்கம் போல் எல்லாருக்கும் முதலில் சென்ற வந்தியத்தேவனுடைய குதிரை அக்கடல் துறையில் இறங்கிப் பாய் ந்து சேற்றில் அகப்பட்டுக் கொண்டது. மிக்க சிரமப் பட்டு அதை வெளியேற்றினார்கள். ஆனாலும் குதிரை இனிப் பிரயாணத்துக்குத் தகுதியில்லையென்று ஏற் பட்டது.

சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரி என்னது செய்வதென்று தெரியாமல் தலையில் அடித்துக் கொண்டார். "என் வாழ்க்கையில் இம்மாதிரி தவறு செய்ததில்லை. எல்லோரும் சும்மா நிற்கிறீர்களே? என்ன செய்யலாம்? இளவரசரை எப்படிக் காப்பாற்றலாம்? யாருக்காவது யோசனை தோன்றினால் சொல்லுங்கள்!" என்றார்.

அப்போது ஆழ்வார்க்கடியான் முன் வந்து, "சேனாதிபதி! எனக்கு ஒன்று தோன்றுகிறது சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்வதற்கு நல்ல வேளை பார்த்துக் கொண்டிருக்கிறாயா? சீக்கிரம் சொல்!" என்றார் சேனாதிபதி.

"இளவரசர் சென்ற யானைக்கு உண்மையில் மதம் பிடிக்கவில்லை"

"என்ன உளறுகிறாய்? பின்னே யாருக்கு மதம் பிடித்தது? உனக்கா?"

"ஒருவருக்கும் மதம் பிடிக்கவில்லை. தாங்கள் வேண்டுமென்று பிரயாணத்தைத் தாமதப்படுத்துகிறீர்கள் என்ற சந்தேகம் இளவரசருக்கு உண்டாகி விட்டது. அதனால் நம்மை விட்டுப் பிரிந்து போவதற்காக யானையை அப்படித் தூண்டி விட்டு வேகமாய்ப் போய்விட்டார். யானையைப் பழக்கும் வித்தையின் சகல இரகசியங்களையும் அறிந்தவர் இளவரசர் என்பது தான் நம் எல்லாருக்கும் தெரியுமே!"

இது உண்மையாயிருக்கும் என்று சேனாதிபதிக்கும் பட்டது அவர் உள்ளம் நிம்மதி அடைந்தது.

"சரி அப்படியேயிருக்கட்டும். ஆனால் நாம் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்துக்குப்போய்ச்சேரவேண்டும் அல்லவா? அங்கே நடப்பது என்ன என்றாவது தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?"

"போக வேண்டியதுதான். கடற்கரையின் ஓரமாகச் சென்று எங்கேயாவது படகு கிடைத்தால் அதில் ஏறிக்கொண்டு தான் கடந்தாக வேண்டும் அல்லது பார்த்திபேந்திர பல்லவரின் கப்பல் வரும் வரையில் காத்திருக்கலாம்."

"வைஷ்ணவரே! நீர் பொல்லாதவர். இளவரசரிடம் இப்படி ஏதாவது சொல்லிவிட்டீர் போலிருக்கிறது."

"சேனாதிபதி! இந்தப் பிரயாணம் கிளம்பியதிலிருந்து நான் இளவரசருடன் பேசவே இல்லை."

இதன் பிறகு அவர்கள் அந் தக் கடற்கழியின் ஓரமாகக் கிழக்கு நோக்கிச் சென்றார் கள்.

நேயர்கள் இலங்கைத் தீவின் வட பகுதியின் இயல்பு எத்தகையது என ஒருவாறு அறிந்திருக்கலாம். இலங்கையின் வடக்கு முனைப் பகுதிக்கு அந்நாளில் நாகத்வீபம் என்று பெயர் வழங்கியது. அந்தப் பகுதியையும் இலங்கையின் மற்றப் பெரும் பகுதியையும் இரு புறத்திலிருந்தும் கடல் உட்புகுந்து பிரித்தது. ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லும் படியாகக் கடற்கழி மிகக் குறுகியிருந்த இடத்துக்கு யானை இறவுத்துறை என்று பெயர். சில சமயம் இத்துறையில் தண்ணீர் குறைவாயிருக்கும். அப்போது சுலபமாக இறங்கிக் கடந்து செல்லலாம்.

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## சாகாத வரம்

வையாபுரி பட்டினம் என்ற நகரம் கடற் கரை ஓரத்தில் அமைந் திருந்தது.

வையாபுரி பட்டினத்தில் முத்து வியாபாரி மாணிக்கத்தை தெரியாதவர் இருக்க முடியாது. மாணிக்கத்தின் வீடு அரண் மனையைப் போல் விசாலமாக இருக்கும்.



முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு முத்து, ரத்தினம், வைரம் என்று மூன்று மகன் கள்.

இவர்களில் பெரிய வன் முத்து வெளிநாடு களில் வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டினான்.

அவன் தம்பி ரத்தினமும் வைரமும் உள்ளூர் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டனர்.

முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு ஒரு நாள் திடீரென்று உடல் நிலை சரியில்லாமல் போனது. தான் இறந்து விடுவோம் என்று தோன்றியது. சொத்துக்கள் அனைத்தையும் உள்ளூரில் இருக்கும் தனது மகன்களிடம் ஒப்படைத்து விட்டு இறந்துபோனார்.

பேராசை கொண்ட ரத்தினமும் வைரமும் அப்பாவின் சொத்துக்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டு அண்ணன் முத்துவை கொலை செய்ய திட்டமிட்டனர். ஒரு நாள் அண்ணன் முத்து திரும்பி வந்தான். அவனிடம் சொத்துக்களை மூன்றாக பிரித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

அண்ணனும் தம்பிகள் சொன்னதை நம்பினான். ஆனால் அன்று இரவே முத்துத் தூங்கி கொண்டிருக்கும் போது அவனை அடித்து ஒரு குளத்தில் வீசி எறிந்தனர்.

அடுத்த நாள் அந்த குளக்கரையில இருந்த கோவிலின் எதிரில் படுத்துகிடந்தான் முத்து. ஆனால் அவன் உடம்பில் எந்த விதமான காயமும் இல்லை.

தூங்கி எழுந்த முத்து தனக்கு முன்னால் கடவுள் பிரத்யட்சமாய் தோன்றியிருப்பதைக் கண்டு வணங்கினான்.

"என்ன நடந்தது?" என்றார் கடவுள். நடந்ததைச் சொன்னான் முத்து.

"இனி உனக்கு எந்த ஆபத்தும் வராது. 400 ஆண்டுகள் வரை நீ வாழ்வாங்கு வாழ்வாய்." என்று வரமளித்து விட்டு கடவுள் மறைந்தார்.

முத்து வீட்டிற்குத் திரும்பினான் ரத்தினமும் வைரமும் அதிர்ச்சியடைந்தனர்.

"காலையில் உங்களைக் காணாமல் துடித்துப் போனோம். உங்களைப் பார்த்த பின்னர் தான்.. எங்களுக்கு உயிரே வந்தது" என்று சொல்லி அழுதனர்.

தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும்.
- பாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாணத்தின் நிர்வாகத்தைச் சீரமைக்க மனித உரிமை ஆணைக்குழு தலையிட வேண்டும்

வட மாகாணத்தின் நிர்வாகம் சீரழிந்து கிடக்கிறது.

இத்தகைய சீரழிவு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறதோ என்று எண்ணுமளவில் நிலைமை உள்ளது. இதுவிடயத்தில் தமிழ் அரசியல்வாதிகளும் தலையிடுவதாக இல்லை.

ஆளுக்கு ஆள் வேறுபட்ட நிர்வாகம் நடப்பதைத் தெளிவாகக் காண முடிகிறது.

இதுதவிர, பழிவாங்கல்களும் தாராளமாக நடக்கின்றன.

உயர்பதவியில் இருப்பவர்; தான் நினைத்ததைச் செய்யக்கூடியதான நிலைமையே இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் வடக்கு மாகாணத்தில் காணப்படும் சீரழிவுகள் நிவர்த்திக்கப்படாமல் விடப்படுமாயின், அதன் ஊடாக ஊழல்களும் அதிகார வெறித்தனமும் கோலோச்சும் என்பது சர்வநிச்சயம்.

உதாரணத்துக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள சில அமைச்சுகள் சுற்றுநிருபங்களின் அடிப்படையில் செயற்படுவதை விடுத்து, தாமே புதுச்சுற்றுநிருபம் தயாரித்து அதனைக் கடைப்பிடிக்குமாறு கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

இவ்வாறு புதுப்புதுச் சட்டங்களை அமுலாக்குகின்ற அதிகாரம்; குறித்த அமைச்சுகளுக்கு யார் கொடுத்தது என்பதுதான் தெரியவில்லை.

ஆனால் இவ்வாறான புதுச்சட்டங்கள் நம் தமிழினத்தை நாசமறுப்பதற்கானதென்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

ஆம், அரச உத்தியோகத்தர்கள் ஐந்து வருட விடுமுறையில் வெளிநாடு செல்வதற்கும் உள்நாட்டில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவதற்குமான சுற்றுநிருபங்கள் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டன.

வட மாகாணத்திலுள்ள சில அமைச்சுகள் அந்தச் சுற்றுநிருபங்களுக்கு மாறாகச் செயற்பட்டு தமிழ் இளைஞர்கள் - தமிழ் அரச உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் திட்டமிட்டுத் தடுத்தன.

அதேநேரம் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் குறித்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணிசமான அளவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

தவிர, அரச சேவையில் உள்ள ஒருவர் தனது 55 வயது நிறைவில் ஓய்வுபெற முடியும். ஆனால் வட மாகாணத்தில் சில அமைச்சுகள் 55 வருடத்துக்குப் பின் ஓய்வு பெறுவதாக இருந்தாலும் ஆறு மாதத்துக்கு முன்னதாக ஓய்வுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென கட்டளையிடுகின்றன.

இவ்வாறாகப் பல குழறுபடிகள் வட மாகாண நிர்வாகத்தில் நடந்தாகின்றன.

எதுஎவ்வாறாயினும் தமக்கு எப்படியும் நீதி கிடைக்கும் என வட மாகாண மக்கள், நீதி மன்றங்களையும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவையுமே நம்பியுள்ளனர்.

எனவே வட மாகாணத்தில் நடக்கின்ற மனித உரிமை மீறல், பக்கச்சார்பு, செல்வாக்கு செலுத்துதல் என்பன தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் பொது மக்களின் தாழ்மையான கோரிக்கை.

# தேர்தலுக்கான கட்டுப்பணம் அதிகரிப்புக்கு எதிராக

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

தேர்தலுக்கான கட்டுப்பணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான பிரஜைகள் அமைப்பு இந்த முறைப்பாட்டினை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்பு கட்டுப்பணத் தொகையை அதிகரிப்பதற்கு அண்மையில் அமைச்சரவையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, ஜனாதிபதி வேட்பாளருக்காக பதிவு செய்யப்பட்ட கட்சிஒன்றின் கட்டுப்பணம் 50,000 ரூபாவில் இருந்து 26 இலட்சம் ரூபாவாகவும், சுயேட்சை வேட்பாளரின் கட்டுப்பணம் 75,000 ரூபாவில் இருந்து 31 இலட்சம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது.

மேலும், பொதுத் தேர்தல் வேட்பாளருக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு 11,000 ரூபாவும், சுயேட்சை வேட்பாளருக்க 16,000 ரூபாவும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளருக்கு 6,000 ரூபாவும், சுயேட்சை வேட்பாளருக்கு 11,000 ரூபாவும் பாதுகாப்பு கட்டுப்பணத் தொகையை அதிகரிக்க அமைச்சரவை தீர்மானித்தது.

இந்த நிலையில், கட்டுப்பணத்தை அதிகரிப்பதன் மூலம், பணபலம் படைத்தவர்களுக்கே தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும், சாதாரண குடிமக்களுக்கு இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

# யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கல்கமுவ மற்றும் மஹகளுகொல்லேவ ஆகிய பகுதிகளில் யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தனது மகளுடன் கல்கமுவ கல்லேவ பகுதியிலுள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர், நேற்று முன்தினம் பிற்பகல் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

62 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்போது காயமடைந்த அவரது மகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, மஹகளுகொல்லேவ பகுதியில் வயல் காணியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி 35 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யானைகளிடமிருந்து பயிர்செய்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7)

# கூரிய ஆயுதத்தால்

## மனைவியை கொன்ற கணவன்

### மாத்தளையில் சம்பவம்

(மாத்தளை)

மாத்தளையில் கூரிய ஆயுதத்தால் கடுமையாக தாக்கப்பட்டு பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கந்தேநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹறுலுகல பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக கணவன் கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், பெண்ணின் சடலம் மாத்தளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தேநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# பாடசாலை மாணவர்களுக்கான பார்வை ஆய்வு அட்டைகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பார்வைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் ஒரு கட்டமாக "பார்வை" ஆய்வு அட்டைகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில், வைத்து ஆளுநரிடம் ஆய்வு அட்டைகள் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவின் வழி நடத்தலின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்த விசேட செயற்றிட்டத்திற்கான பார்வை ஆய்வு அட்டைகளை, நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் ஆளுநரிடம் கையளித்தனர்.

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமானது.

அதற்கமைய, கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகள், வலயக் கல்வி பணிமனைகளூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத் திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கான பார்வை தொடர்பில் ஆராய்வதற்கான பார்வை ஆய்வு அட்டைகளே கையளிக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆளுநரின் செயலகத்தின் ஊடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளுக்கு வழங்கப்பட்டு, அங்கிருந்து பாடசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (நி-6)

# காணவில்லை

(யாழ்ப்பாணம்)

புதுக் குடியிருப்பு, கோம்பாவில் 2 ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த மதேந்திரன் மதிநிலா என்ற 17 வயது மாணவி கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேலதிக வகுப்பிற்குச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-6)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஐ.தே.கவுடன் இணைக்க சூழ்ச்சி

## துஷ்மந்த மித்ரபால எம்.பி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்குச் சிலர் சூழ்ச்சி செய்தாலும் அக்கட்சி ஆதரவாளர்கள் இடமளிக்கமாட்டார்கள் என்று சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

சுதந்திரக் கட்சிக்கு இது சவால் மிகு வருடமாகும். தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எனவே, சூழ்ச்சிகளுக்கு அடிபணியாது கட்சியை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

சுதந்திரக் கட்சியை யானை வாலுடன் முடிச்சுப் போடுவதற்குச் சில குழுக்கள் முற்பட்டாலும் அக்கட்சி ஆதரவாளர்கள் அதற்கு இடமளிக்கமாட்டார்கள் என்றார். (ம-7)

# புதிய விசா நடைமுறை நேற்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

புதிய விசா நடைமுறை மற்றும் புதிய ஒன்லைன் நடைமுறை ஆகியன நேற்று முதல் அமுல்படுத்தப்படுவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய விசா நடைமுறை, அதற்கான கட்டணம், பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் நாட்டில் தங்கியிருக்கக்கூடிய காலப்பகுதி ஆகிய விடயங்கள் தொடர்பில் அண்மையில் அதி விசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டது.

புதிய நடைமுறையினூடாக பல்வேறு நாடுகளில் இருந்து ஒன்லைன் ஊடாக விசா விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் என குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சுற்றுலா விசாவை 6 மாத காலப் பகுதிக்கு பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

12

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கையில் ஒழுங்கு, அமைதி, திறமை என்னும் பண்புகளுடைய அரசாட்சி முறைமை, அவரது ஆட்சிக் காலத்தில் தான் முளை கொண்டதெனலாம். நாட்டின் நீதி நிர்வாகம், குடியியற் சேவை, வைத்திய திணைக்களம், கல்வித் திணைக்களம், பொது மராமத்து திணைக்களம் என்பவை யாவும் அவரது காலத்தில் நிறுவப்பட்டவை. அவற்றின் வளர்ச்சியின் பயனாகவே கடந்த நூற்றாண்டில், இலங்கை பல்வேறு துறைகளிலும் முன்னேற்றத்தைக் கண்டுகளிக்க முடிந்ததெனில் மிகையாகாது.

### சேர் தோமஸ் மெயிற்லந்து (1805-1811)

இலங்கையினின்று பதவி நீங்கி வெளிச்சென்ற நோத்துக்குப் பதிலாய் 1805 இல் தளபதி மெயிற்லந்து ஆள்பதியாய் நியமனம் பெற்றார். யூலை 18 ஆம் நாள் இத்தீவினை வந்தடைந்த அவர், அடுத்த தினம் இராச்சிய பாரத்தை ஏற்றார். மேற்கிந்தியத் தீவுகளில் பரிபாலனம் செய்த பொழுது மெயிற்லந்து ஆற்றல் மிகுந்த ஆட்சியாளரென்றும், நிதி நிபுணரென்றும் பெயர் பெற்றவர். அங்கு அவர் பெற்ற கீர்த்திக்கு நிகராக இலங்கையிற் சேவை செய்த உன்னத ஆள்பதிகளின் வரிசையில் அவரும் நாளடைவில் இடம்பெறத் தகுதி வாய்ந்தவரானர்.

ஏனெனில் அவர் குடியேற்ற நாடுகளின் பாலனத்தைப் பற்றியும் ஓர் ஆள்பதியின் பொறுப்பைப் பற்றியும் மிகவும் முற்போக்கான கொள்கைகளையுடையவராக விளங்கினர். "சுதேச மக்களின் செல்வப் பெருக்கையும், மனரம்மியத்தையும் பொதுவாக அபிவிருத்தி செய்வதன் மூலமாகவே, இலங்கைத்தீவின் செல்வத்தைப் பெருக்க வேண்டுமென்பதே அரசாங்கத்தின் இன்றைய குறிகோளும் என்றைய நோக்குமாக இருத்தல் வேண்டும்" என்பது மெயிற்லந்தின் கூற்று.

நாட்டின் பிரச்சினைகளை நேர்முகமாக அறிய நோக்கங் கொண்ட அவர், தம் ஆட்சிக் காலத்தில் ஆறு மாதங்களைத் தீவின் பல பாகங்களையும் சுற்றிப் பார்ப்பதிற் செலவிட்டார்.

மெயிற்லந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட பொழுது அவருக்கு விடுக்கப்பட்ட ஒரு விசேட கட்டளை, இலங்கையின் படு மோசமான நிதி நிலையைத் சீர்ப்படுத்த வேண்டுமென்பதாகும். அவர் பதவியேற்ற பொழுது திறைசேரி வெறுமையாகவும், செலவினங்களுக்கு இங்கிலாந்திலிருந்து பணம் பெறவேண்டிய அவல நிலையும் அவரை எதிர்ப்பட்டு நின்றன.

எனவே அவர் கையாண்ட முறைகள் யாவற்றிலும் சிக்கனத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணமும், நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்ய வேண்டுமென்ற திடமுமே மேலிட்டு நின்றன. நோத் தீட்டிய பாரிய திட்டங்களை வன்மையாகக் கண்டித்தார். ஆரம்பகாலத்தில் அவர் கையாண்ட சிக்கன வழிகளினால் நாட்டு வருமானத்தில் மிகுதி காட்ட முடிந்தது.

### கரையோரப் பிரதேசங்களில் குடியியற் சேவை

மெயிற்லந்து தனக்குமுன் சென்ற நோத்தின் திட்டங்களை நிராகரிக்காது, அவற்றில் காணப்பட்ட மிதமிஞ்சிய செலவுகளைக் கட்டுப்படுத்தினர். நோத் ஆரம்பித்து வைத்திருந்த இலாக்காக்களை புனர்நிர்மாணம் செய்தார். தேவையற்றவையெனக் காணப்பட்ட பல பகுதிகள் நீக்கப்பட்டன. அவர் ஒரு மிகத்திறமை வாய்ந்த நிர்வாகி, தனது திறமையை குடியியற்பாலன சேவையாளர்களிலும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களிலும் முத்திரையிட வேண்டுமென அயராது உழைத்தார்.

ஒழுங்கு முறையான உள்ளம் படைத்த அவர், நிர்வாகத்தில் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலை நாட்டினர். தனது அயரா உழைப்பாலும் நன்சேவையாலும் நாட்டின் நிர்வாகத்தைத் திறம்பட மாற்றியமைத்த அவர், இன்றும் அவர் செய்த நன்முயற்சிகளுக்காக நினைவு கூறப்படுகிறார்,

மெயிற்லந்தின் சீர்திருத்தங்களுள் முதன்மை பெற்று விளங்குவது குடியியற் சேவையின் புனரமைப்பாகும். குடியியற் சேவையாளர் வியாபாரத்தில் ஈடுபடுவதை அவர் 1805 இல் தடை செய்தார். மெயிற்லந்து, குடியியற் சேவையை மூன்று வகுப்புக்களாக வகுத்தார்.

மூன்றாம் வகுப்பில் சேர்ந்த சேவையாளர் மூன்று ஆண்டுகள் திருப்திகரமான சேவை செய்தபின் இரண்டாம் வகுப்புக்கு உயர்வும், இரண்டாம் வகுப்பில் ஏழு ஆண்டுகள் சேவையின் பின் முதலாம் வகுப்புக்கு உயர்வும் பெறுவதற்கு வழி வகுத்தார். மேலும் அவர்கள் சிங்களம், தமிழ் மொழிகளைக் கற்று குடிசனங்களுடன் நேரடியான தொடர்பு கொள்ள வேண்டுமென விரும்பினர்.

சிங்கள அறிவுள்ள அதிகாரிகள் மூன்றாம் வகுப்பினின்று இரண்டாம் வகுப்புக்கு ஈராண்டுகளிலும், முதலாம் வகுப்புக்கு ஆறு ஆண்டுகளிலும் பதவி உயர்வுபெற வசதி செய்து, சிங்களம் கற்பதில் ஊக்கத்தைப் பிறப்பித்தார்.

### கரையோர பிரதேச மாகாணப் பரிபாலனம்

மெயிற்லந்து மாகாணப் பரிபாலன விடயங்களிலும் புதுப்புது ஏற்பாடுகளைக் கட்டளையிட்டார். அரசிறை விடயங்களுக்குப் பொறுப்பாக அரசிறை ஆணையாளர் என்னும் ஒரு உயர் அதிகாரியையும், அவரது பரிபூரண அதிகாரத்தின் கீழ் சேவைபுரியும் பத்து கலைக்டர்களை ஒவ்வொரு மாகாணத்துக்குமென நியமித்தார். ஆள்பதியின் அனுமதியுடன் கலெக்டர்களை பதவியினின்று நீக்க ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

திறைகளை வசூலித்தல், சிறிய பாதகவியல், குடியியல் வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்புக்கூறல் என்பவை கலைக்டரின் பிரதான கடமைகளாகும். அவற்றைத்தவிர அவர்கள் அடிக்கடி தமது மாகாணத்தைச் சுற்றிப்பார்த்து விவசாயம், வர்த்தகம் ஆகிய முயற்சிகளும், மக்களின் சுகாதார நிலையும் விருத்தியடைவதற்கான வழிவகைகளைத் தேட வேண்டுமெனக் கட்டளையிட்டார்.

ஒவ்வொரு கலைக்டரும் "தன் மாகாணம் அடங்கலும் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்து அம் மாகாணத்திலுள்ள பல்வேறு பிரிவு மக்களோடும், தலைமைக்காரர்களோடும், அறிமுகமாயிருத்தல் வேண்டும். மற்றும் ஆண்டுதோறும் தம் பிரிவையும் அவர் பார்வையிட்டு குடியானவர்களின் முறைப்பாடுகளையும் மனுத்தாக்குதல்களையும் கிரமமாய் விசாரித்து முறைப்படுத்தி வரல் வேண்டும்" என மெயிற்லந்து கட்டளைவிதித்தார். மேலும்ஒவ்வொரு கலைக்டரும் தன் மாகாணத்தின் பரிபாலனம் சம்பந்தமாக ஓர் ஆண்டறிக்கை தயாரித்துத் தனக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கட்டளையிட்டார்.

### கரையோர பிரதேச விவசாயம் முயற்சி

நோத் செய்திருந்த நிலச் சீர்திருந்தங்களையும் அவர் கையாண்ட நிலப்பாவனையையும் மெயிற்லந்து முழுமையாக மாற்றியமைத்தார். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் அனுமதித்திருந்த இராசகாரிய முறையினை சென்னை வர்த்தக சங்கத்தினர் தமது குறுகிய ஆட்சிக் காலத்தில் நிராகரித்தமையின லேயே அமைதியீனமுண்டானது என்பதையும் அதன் நீக்கத்தினால் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டது என்பதையும் மெயிற்லந்து கண்டார்.

மேலும் இராசகாரிய முறையின் ஒழிப்பினல் நோத்தினுடைய காலத்தில் பொது மராமத்து வேலைகளுக்குக் கூலியாட்கள் கிடைக்காமற் போனதால் தென்னிந்தியாவினின்று ஆட்களை வரவழைக்கவும் அதற்காக ஆண்டுதோறும் மிகுந்த பணம் செலவிட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது, இதனல் அரசாங்கம் கடும் நட்டத்துக்குள்ளாவதைக் கண்ட அவர், குடியேற்ற நாட்டுச் செயலாளரின் அனுமதியுடன் பழைய இராசகாரிய முறையினை மீண்டும் நிலைநாட்டினர்.

இலங்கையின் அக்காலப் பொருளாதார நிலைக்கு சேவை மானிய முறையே தகுந்ததென்றும் அதில் மாற்றம் செய்வதற்கு பொருளாதார நிலை முதல் மாறவேண்டுமென்றும் எடுத்துக்காட்டினர். நாட்டின் பொருளாதார நிலையை விருத்தி செய்வதற்கும், வருவாயை அதிகரிப்பதற்கும், விவசாயத்தையும் வியாபாரத்தையும் ஊக்குவித்தலே, இரு அதி சிறந்த முறைகளென தாய் நாட்டரசாங்கம் சுட்டிக்காட்டிற்று. நெல் விளைச்சலை அதிகரிக்கச் செய்து நாட்டின் உணவுத் தேவை யைத் தானே பூர்த்தி செய்ய வேண்டு மென்ற உயர் நோக்கத்துக்காக மெயிற்லந்து அயராது உழைத்தார்.

### கரையோர பிரதேச நீதிச் சீர்திருத்தங்கள்

கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை- மட்டக்களப்பு, புத்தளம்-சிலாபம் எனும் ஐந்து மாகாணங்களில், குடியியற் பாதகவியல் வழக்குகளை விசாரணை செய்வதற்கு ஐந்து நீதிமன்றங்களை அமைத்தார். இம்மன்றங்கள், உச்ச நீதி மன்றத்துக்கும் தலத்திலுள்ள பொலீஸ்மன்றுகளுக்கும் இடைப்பட்ட ஸ்தானத்தை வகிக்கத் தொடங்கின.

இம்மன்றங்களின் நீதிபதிகளுக்கு, மாகாண அரசாங்க முகவர்களின் அதிகாரங்களுக்குக் கட்டுப்படாது சுயேச்சையாக இயங்க சுதந்திரம் வழங்கப்பட்டது.நீதித் துறையில் மெயிற்லந்து நிலைநாட்டிய இன்னுமொரு முக்கிய மாற்றம், உச்ச நீதி மன்றத்தில் யூறி முறையை ஏற்படுத்தியதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்புடன்...

கோயிலடிப் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து பத்தாயிரம் மில்லிலீற்றர் கசிப்பும் அதனைப் பொதி செய்ய பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

## யாழில்...

கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நான் மோசடி...

இருந்தாலும் வெளிப்படுத்துங்கள் என்று மைத்திரிபால சிறிசேன சவால் விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, சிறிமாவோ பண்டார நாயக்க வின் 108ஆவது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பரமேஸ்வரா...

பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட காருடன் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-7)

## மருதமடு மாதா...

மருதமடு மாதாவின் திருச்சுரூப பவனி நெல்லியடி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று பிற்பகல் 5.00 மணிக்கு வருகை தந்துள்ளதுடன் அங்கு சிறப்பு வழிபாடு களும் இடம்பெற்று வருகிறது.

இன்று காலை 7 மணிவரை சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளதுடன் காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு பருத்தித்துறை சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் நான்கு மணிவரை சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

மருதமடு மாதாவின் வருகையால் நெல்லியடி நகரமே விழாக்கோலம் பூண்டு காணப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகை தந்துள்ளனர். நெல்லியடி பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.(ம-7,60)

## வடக்கில்...

கிழக்கு, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் வெப்ப நிலை மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பம் அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## யுக்திய...

இதன்போது கைது செய்யப்பட்ட 10 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையாகவுள்ள 6 சந்தேகநபர்கள் புனர் வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த யுக்திய நடவடிக்கையின் போது மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 416 சுற்றிவளைப்புகளில் 410 ஆண்களும் 6 பெண்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின், ஐஸ் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## தற்போது...

வாறு குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டதும் அதன் பின்னரான நாட்களின் செயற்பாடு களின் ஊடாக என்னுடைய தலைமைப் பதவி ஒரு நீதிமன்ற செயற்பாட்டுக்கு, கட்டளைக்கு உட்படப் போகின்றது என்பது எனக்கு நன்றாகவே தெரியும் என்றும் அவர் தெரிவித்தார்.(ம-7)

# எந்தவித குறுஞ்செய்திகளும் அனுப்பப்படாது - அஞ்சல் திணைக்களம்

(கொழும்பு)

உள்நாட்டிலிருந்து அல்லது வெளிநாட்டிலிருந்து பொதிகள் கிடைத்துள்ளதாக அறிவித்து வாடிக்கையாளர்களுக்கு தமது திணைக்களத்தினால் எந்தவித குறுஞ்செய்திகளும் அனுப்பப்படமாட்டாது என இலங்கை அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போலியாக உருவாக்கப்பட்ட இணையத்தளம் மற்றும் தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்தி, போலியான இலக்கங்கள் ஊடாக மக்கள் ஏமாற்றப்படுவதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக இலங்கை அஞ்சல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் பெயரையும், உத்தியோகபூர்வ இணையத்தள முகவரியையும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தியும் இந்த மோசடி இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது. (ம-7)

## முதலீட்டை...

தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"கடந்த ஆண்டு 1.5 பில்லியன் டொலர்கள் முதலீட்டுக்கான இலக்கு எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 1.8 பில்லியன் டொலர்களை முதலீடுகளாகப் பெற எம்மால் முடிந்தது.

மேலும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், முதலீடுகள் கணிசமான அளவில் நாட்டிற்குள் வருவதாகவும் அவர் கூறினார். (ம-7)

## கச்ச...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டணி எவ்வளவு தேச விரோதச் செயல்களை செய்துள்ளது என்பதை நினைவுத்துப் பார்க்க வேண்டும். நாட்டு மக்கள் அனைவருக்கும் இதன் உண்மைத் தன்மை தெரியும்.

இவ் விரு கட்சியினரும் தமிழ் நாட்டின் உயிர் நாடியான கச்சதீவை துண்டித்து வேறு ஒரு நாட்டிற்கு கொடுத்துள்ளனர். திரைமறைவில் செய்த இந்த வரலாற்றுப் பிழையை ஒரு போதும் மன்னிக்கவே முடியாது.

இந்த வரலாற்றுப் பிழை மன்னிக்கவே முடியாத பாவமாகவும் நான் கருதுகின்றேன். இது திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டணி செய்த தேசத் துரோக செயலாகும்.

அவர்கள் செய்த பாவத்திற்காக தமிழக மீனவர்களே தண்டிக்கப்படுகின்றனர்.

பல தலைமுறையாக பயன்படுத்தி வந்த இடத்தை தாரை வார்த்ததை பாஜக ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியுள்ளது" என அவர் தெரிவித்தார்.(ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.04.17
சீட்டிழுப்பு இலக்கம் 5448
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 0 7 0 9 2 0
அத சம்பத
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 0 9 2 0
சீட்டிழுப்பு இலக்கம் 23
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1478
O 01 29 31 46 O
Double Chance 27570

மெகா பவர்
திகதி 17/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1796
K 03 24 32 55 64
83401

லக்கி 7 VIP
திகதி 2024.04.17
சீட்டிழுப்பு இலக்கம் 0274
T 3 5 4 4 9 2 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3690
சீட்டிழுப்பு திகதி 17.04.2024
K 05 67 75 79
K 21548

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.17
சீட்டிழுப்பு இலக்கம் 0757
துலாம் 09 38 43 61 துலாம்
53025 13

உத்தியோகபூர்வ முடிவுகள்
17.04.2024 வெற்றி வாரம் 156 வர்ணம் பச்சை
A 1 3 6 9 5 3
08521 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் 20,625,492.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2422 வர்ணம் சிவப்பு திகதி 17.04.2024 தினம் புதன்கிழமை
01 36 37 71 F
55723
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 83,679,229.60

சனிதா
திகதி 2024.04.17 வெற்றி வாரம் 4583 வர்ணம் ஊதா
01 02 17 69 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.56,118,757.60
51058

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4134 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.04.17 தினம் புதன்கிழமை
22 28 47 49 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 3,891,507.60
510225

கப்றுக
B 15 14 22 63 74
1598
645237
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 517,868,668.60
2024.04.17 புதன்கிழமை

ஜயோதா Jayoda
திகதி 2024.04.17 வெற்றி வாரம் 2017 வர்ணம் மஞ்சள்
01 02 13 28 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.23,021,109.60
38920

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2248
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2024.04.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.106,524,971.20
23 39 45 56 R
493207


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (481)
076 825 7716 (ஆகாஸ்)

# கருகிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

வீடொன்றின் படுக்கை அறையில் தீப் பரவலில் சிக்கி சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நபரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

உடவலவை - கொழும்பகே பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அந்த வீட்டில் வசிக்கும் 48 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டிற்கு அருகாமையில் கடையொன்றை நடாத்தும் அவர், நேற்று அதிகாலை தனது மனைவியுடன் தகராறு செய்து வீட்டிற்குள் வந்து தீ வைத்து கொண்டதாக மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் எம்பிலிபிட்டிய நீதவான் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் உடவலவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-7)

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. யாழ் நகரத்திற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
077 386 6250 (482)

வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (395)
074 17 37 684

வேலையாட்கள் தேவை
வடிவமைப்பாளர் ஆண்/பெண்
வரவேற்பாளர் ஆண்/பெண்
அனுபவம் உள்ளவர்கள் அல்லது அடிப்படை கணனி அறிவு உள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.
SMART DIGITAL PRINTING (490)
#255, Stanley Road, Jaffna.
Tel : 021 221 2958, Mob: 0774724075
e.mail : smartjaffna@gmail.com

Asian Furniture
ஏசியன் தளபாடத்தின் மாபெரும் Sales
No 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்) (C-0161)
077 358 3879
076 821 9416

வேலையாட்கள் தேவை
- Graphic Designer (கிராபிக் டிசைனர்)
- Banner Machine Operator (பனர் மெசின் இயக்குனர்)
- Welder (வெல்டர்)
- Typist (ரைப்பிஸ்ற்)
நியாயமான சம்பளம் வழங்கப்படும். (489)
077 158 7186

விற்பனைக்கு
கோண்டாவில் டிப்போவிற்கு அருகாமையில் 1 3/4 பரப்பு வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : (486)
076 821 9414

V2 VISA SERVICES
கனடா Visit Visas
077 77 20 322
077 77 19 322
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0163)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் (C-0164)
V2 TRAVELS
வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
சம்பளம் - 30'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள Telephone network linesman தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (483)
T.P : 077 171 8777
Email : admin@mbilk.com

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

மீண்டும் யாழ் மண்ணில் Expo NET கால் பதிக்கிறது
- 1800 பேர்கள் வரை Canada, UK, Europe Countries க்கு அனுப்பியுள்ளோம்.
- CANADA VISA உடன் செய்து கொடுக்கப்படும்.
- CANADA VISA நிராகரிக்கப்பட்டவர்கள் தகுந்த ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும்.









Expo Net Overseas Consultants
No.345, Kasthuriyar Road, Jaffna
021 222 5686 | 076 424 7111


(C-0162)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் ... அவர்களது அச்சகத்தில் 18.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org